# Tamil Murli Quiz 20-09-2015

தமிழ் முரளி வினாடி-வினா
முரளியினை மறுமுறை நினைவுற உதவும் வினாடி-வினா. இன்றைய முரளியிலிருந்தே கேள்விகள் கேட்கப்படும்.
இங்கே கிளிக் செய்க: 20 நிமிட முரளியின் எம்பி3 கோப்புகள் மற்றும் பழைய வினாடி-வினா.abc

**Q.1)** <u>சரியான விடை கொண்டு வாக்கியத்தை முடிக்கவும்:</u>
**இன்று பாபா குழந்தைகளின் எந்த இரட்டை சொரூபத்தை பார்த்துக் கொண்டிருந்ததாகக் கூறுகிறார்?**

- **A.** முயற்சி செய்பவரின் ஸ்வரூபம் மற்றும் இறுதி நிலையான சம்பூர்ண பரிஸ்தா ஸ்வரூபம்
- **B.** பரிஸ்தா ஸ்வரூபம் மற்றும் தேவதா ஸ்வரூபம்
- **C.** நிராகாரி ஸ்வரூபம் மற்றும் தேவதா ஸ்வரூபம்
- **D.** லைட் கிரீட ஸ்வரூபம் மற்றும் சம்பூர்ண பரிஸ்தா ஸ்வரூபம்

**Q.2)** <u>சரியான **2 (இரண்டு)** விடை**களைத்** தேர்வு செய்யவும்:</u>
**லட்சியம் மற்றும் லட்சணத்தில் மிகப்பெரிய வித்தியாசம் ஏற்படக் காரணமாக பாப்தாதா எதைக் கூறுகிறார்?**

- **A.** தன்னுடைய தவறை மற்றவர்கள் மேல் போடத் தெரிகிறது ,ஆனால் தன்னுடைய தவறை உணர்ந்து தன்மேல் அந்தக் குற்றத்தை போடத் தெரியவில்லை
- **B.** முயற்சி செய்வதில் சோம்பேறித்தனம்
- **C.** குணத்தை கிரகிப்பவர் ஆவதற்கான சக்தி குறைவாக இருக்கிறது
- **D.** நேரத்தைப் பற்றிய விழிப்புணர்வு குறைவாக இருக்கிறது

**Q.3)** <u>சரியான விடையை தேர்வு செய்யவும்:</u>
**சிவபாபா தன்னுடைய அனைத்து குழந்தைகளும் ஞானம் நிறைந்தவர்களின் கூடவே ___________________ தெரிந்தவர்களாக இருக்கிறார்கள் என்று கூறினார்.**

- **A.** ஸ்ருஷ்டி சக்கரத்தையும்
- **B.** மூன்று காலங்களையும்
- **C.** எதிர் காலத்தையும்
- **D.** யோகம் செய்யவும்

**Q.4)** <u>சரியா? தவறா?:</u>
**வாய்மொழி சேவைக்கு முன்பு நற்சிந்தனை உடையவரின் பாவனையோடு எதுவரை நிலத்தை தயார் செய்ய வில்லையோ அதுவரை வாய்மொழி சேவையின் பலனும் உருவாகாது.**

- **A.** சரி
- **B.** தவறு

**Q.5)** <u>சரியான விடையை தேர்வு செய்யவும்:</u>
**குழந்தைகளின் கிரகிக்கும் சக்தி மிகவும் அதிகமாக இருப்பதன் காரணமாக ஞானம், குணம் மற்றும் சக்திகளை கிரகிப்பதன் கூடவே _________________ கிரகிக்கும் சக்தியும் அதிகமாக இருக்கிறது என்று பிரம்ம பாபா கூறினார்.**

- **A.** அசுத்த எண்ணங்களை
- **B.** மற்றவர்களின் விகாரங்களை
- **C.** மற்றவர்களின் பலஹீனங்களை
- **D.** வீண் பேச்சுக்களை

**Q.6)** <u>சரியான விடையை தேர்வு செய்யவும்:</u>
**முயற்சி செய்பவர்களாகிய உங்கள் அனைவரின் ஸ்லோகன் எது என்று பாபா கூறுகிறார்?**

- **A.** ஒரு தந்தை மட்டுமே , வேறு யாரும் இல்லை
- **B.** ஒரே பலம் ஒரே நம்பிக்கை
- **C.** இன்றில்லையேல் என்றும் இல்லை
- **D.** என்னைப் பார்த்து மற்றவர்கள் செய்வார்கள்

*Q.7)* **<u>சரியான விடையை தேர்வு செய்யவும்:</u>**
**8 ரத்தினங்களில் வருவது நம்பர் ஒன் , நம்பர் ஒன்றில் வருவதற்கான சுலபமான வழி எது என்று பாப்தாதா கூறுகிறார்?**

- **A.** நம்பர் ஒன் ஆக இருக்கும் பிரம்ம பாபாவை மட்டும் பாருங்கள்
- **B.** நம்பர் ஒன்றாக இருக்கும் சிவபாபா மட்டும் பாருங்கள்
- **C.** எந்த தேகதாரிகளையும் பார்க்காதீர்கள்
- **D.** மகாரதிகளைப் பாருங்கள்

*Q.8)* **<u>சரியான விடை கொண்டு வாக்கியத்தை பூர்த்தி செய்யவும்:</u>**
**சொல்வது குறைவு . செய்வது அதிகம் என்ற இந்த உயர்ந்த லட்சியம் _______________ ஆக்கி விடும் .**

- **A.** விஷேசமானவராக
- **B.** மகான்
- **C.** பாக்கிய சாலிகளாக
- **D.** ஆசீர்வாதங்களுக்கு உரியவராக

*Q.9)* **சரியான இரண்டு விடைகளை தேர்ந்தெடுக்கவும் :**
**கர்நாடகத்தைச் சேர்ந்தவர்களின் விஷேசமாக பாபா எதை கூறினார்?**

- **A.** விட்டில் பூச்சி கள். விளக்கொளியில் விழுந்து எரிவதில் திறமை சாலிகள்
- **B.** படைப்பவர் ஆவதிலும் திறமை நிறைந்தவர்கள்
- **C.** விஷ்ணுவாக ஆவதை நன்றாக தெரிந்திருக்கிறார்கள்
- **D.** வெள்ளி விழாவில் வி.ஐ .பி குரூப்பை அதிக அளவில் அழைத்து வந்தவர்கள்.

*Q.10)* **சரியான விடையை தேர்ந்தெடுக்கவும் :**
**இந்த சிவராத்திரி அன்று வி.ஐ.பி மூலமாக விஷேசமாக எந்த இரண்டு படங்களை நன்கு அலங்கரித்து திறப்பு விழா செய்து இரண்டிற்கும் உள்ள வேற்றுமைகளை நிரூபணம் செய்யுங்கள் என்று பாபா கூறுகிறார்?**

- **A.** நிராகாரி சிவன் மற்றும் தேகதாரி சங்கர்
- **B.** நிராகாரி சிவன் மற்றும் தேகதாரி பிரம்மா
- **C.** ஸ்ரீ கிருஷ்ணர் மற்றும் ஸ்ரீ லட்சுமி-நாராயணர்
- **D.** நிராகார சிவன் மற்றும் ஸ்ரீ கிருஷ்ணர்